DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C, “ | : | 188/2022 |
| O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W.1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | இராமநாதன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.02.2024

**முதல் விசாரனை:**

நான் காரைக்குடி டி.டி.நகர் முதல் வீதியில் மீனாட்சி இல்லத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கின் சாட்சிகள் கணேசன், ஆறுமுகம், சிதம்பரம் ஆகியோர்களை தெரியும். எங்களுக்கு குடும்பத்திற்கு சொந்தமான கண்டனுார் ரோடு காரைக்குடியில் உள்ள லைன்வீட்டில் உள்ள போல்வெல்லில் உள்ள மோட்டாரை 1-வது எதிரி ராஜா என்ற ராஜசேகர் திருடி சென்றுவிட்டார். அது சம்மபந்தமாக நான் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் புகார் செய்திருந்தேன். அதன் அடிப்படையில் ராஜா என்ற ராஜசேகரை வழக்கு பதிவு செய்து சிறைக்கு சென்று விட்டார். அதன் காரணமாக என்னை மிரட்டிக்கொண்டிருந்தார். அந்த பிறகு லைன் வீட்டில் இருந்த ராமையா என்பவரும் ரமேஷ் என்பவரும் என்னிடம் வந்து உன்னை கொல்வதற்கு சதி திட்டம் தீட்டிகிறார் என்று சொன்னார்கள். 08.03.2016 தேதியில் ரமேஷ் மற்றும் ராமையாவும் கடைசி வீட்டுப்பக்கம் போகும் போது அந்த வீட்டில் இருந்த லதா ராஜேஸ் குமார், கார்த்தி, ராஜா என்ற ராஜசேகர் ஆகியோர் ஆக்ரோசமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்று ராமையாவும் ரமேஷ்சும் என்னிடம் சொன்னார்கள். அங்கிருந்தவர்கள் அந்த கிழவனை கொண்றுவிட வேண்டும் அப்போதுதான் அந்த சொத்தை நாம் அடையலாம் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று

பேசிக்கொண்டார்கள். அதற்கு ராஜா என்ற ராஜசேகர் நான் ஏற்பாடு செய்து அந்த கிழவனை கொண்றுவிடுகிறேன். நீங்கள் எல்லோரும் எனக்கு பக்கதுணையாக இருங்கள் என்று சொன்னாராம். 09.03.2016ம் தேதியில் மேற்சொன்ன விவரங்களை ராமையாவும், ரமேஷ்சும் என்னிடம் வந்து கூறினார்கள். இந்த சதி திட்டத்தில் இருந்து நீங்கள் உங்களை காப்பாற்றிக்கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினார்கள். நான் அப்போது அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. பின்பு கடந்த 13.03.2016ம் தேதியில் மதியம் 1.15 மணிக்கு கார்த்திக் என்பவரையும் ராஜேஸ் குமார் என்பவரையும் வேவு பார்க்க வைத்து அத்து மீறி எனது வீட்டிற்குள் நுழைந்து இடுப்பில் வைத்திருந்த அருவாளை எடுத்து துாக்கி காண்பித்து கெட்ட வார்த்தையில் தேவுடியா பயலை, கண்டார ஓலி, புண்டை மகனே, திருட்டுப்பயலே மொல்லமாறி பயலை என்று கூறி என்னை ஜெயிலில் 1 வாரம் உள்ளே வைத்துவிட்டாய் என்றும், உன்னுடைய குடும்ப சொத்து உனக்கு கிடைக்காத வகையில் பன்னிவிடுவேன் நீ உயிரோடு இருந்தால் தானை சொத்தை அனுபவிப்பாய், நீ இத்தோடு துலைந்தாய் என்று அரிவாளால் தலையின் இடது பக்கம் இடது கையில், இடுப்பின் பின்பக்கம் வலது புறம், வலது கால் முட்டி, இடது கால் துடை, முட்டிகளில் சரமாரியாக ராஜா என்ற ராஜசேகர் வெட்டினான். இத்தோடு நீ செத்தாய், தொலைந்துவிட்டாய் என்று கூறினான். ராஜா என்ற ராஜசேகர் என்னை கொலை செய்கிறார் என்று அலறி சத்தம் போட்டேன். அந்த அலறல் சத்தம் கேட்டு அந்த வீதியில் பூச்செடி கடையில் வேலை பார்க்கும் கருப்பையா மகன் ஆறுமுகமும், சிங்கப்பூர் சாப்பிங் சென்டர் வைத்து இருக்கும் குருசாமி மகன் கணேசனும் நான் விழுந்து கிடந்த இடத்திற்கு வந்து விட்டார்கள். அவர்களிடம் நான் ராஜா என்ற ராஜசேகர் தான் என்னை சாக அடிப்பதற்காக அரிவாளால் வெட்டி விட்டான் என்று சொன்னேன். உடனே ராஜா என்ற ராஜசேகர் அடே நீ இன்றைக்கு தப்பித்து விட்டாய் என்றைக்கு இருந்தாலும் என் கையால் தான் உனக்கு சாவு என்று அரிவாளை காண்பித்து விட்டு அரிவாளுடன் ஒடிவிட்டான். பிறகு கணேசனும் ஆறுமுகமும் தெருவில் இருந்த ஆட்டோவில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். சிறிது நேரத்தில் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் இருந்து போலிஸ் வந்து என்னை விசாரணை செய்தார்கள். நடந்த சம்பவத்திற்கு நான் சொல்ல சொல்ல போலிஸ் சார் புகார் வாக்குமூலம் எழுதிக்கொண்டார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1. மேற்சிகிச்க்கைாக என்னை மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள். நாங்களும் உடனடியாக ஆம்புலன்சில் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் எமர்ஜென்ஸி பிரிவில் சேர்ந்து சிகிச்சை மேற்கொண்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிஸ்சார் விசாரணை செய்தார்கள்.என்னிடம் காட்டப்படும் அரிவாளைத்தான் சம்பவத்தின் போது எதிரி ராஜா என்ற ராஜசேகர் பயன்படுத்தினார். சுமார் 11/2 அடி நீளம் உள்ள அரிவால் ஒன்று சா.பொ.1.

**குறுக்கு விசாரணை:**

1-ம் எதிரி ராஜசேகர் என்பவர் எனது முத்தையா என்பவரின் மகள் அலமேலு என்பவரை கலப்பு திருமணம் செய்துள்ளார். எனது அண்ணன் மனைவி நாச்சம்மை

என்பவர் குடும்ப சொத்துகள் தொடர்பாக சிவகங்கை மாவட்ட நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்7/2015 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. எதிரிகள் வசித்து வரும் அலமேலு இல்லம் என்ற வீடும் மேற்படி வழக்கில் ஒரு சொத்தாக அடங்கியுள்ளது. எனது அண்ணன் முத்தையாவும் 1-ம் எதிரியின் மனைவி அலமேலுவும் இறந்து விட்டார்கள். இவ்வழக்கிற்கு முன்பு 1-ம் எதிரி மேற்படி வீட்டில் இருந்த தண்ணீர் மோட்டாரை திருடி விட்டதாக புகார் கொடுத்து அவர் கைது செய்யப்பட்டு சிறையில இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸ்சார் 2, 3 முறை என்னை விசாரித்தார்கள். ஒரு முறை காரைக்குடி அரசு மருத்துவமனையிலம் பின்பு மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். முதல் முறை போலீஸ்சார் விசாரித்த போது 2முதல்4 எதிரிகளை பற்றி நான் சொல்லவில்லை. ஏனென்றால் அந்த நேரத்தில எனக்கு நினைவில் இருந்ததை நான் சொன்னேன். மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் உள்நோயாளியாக சுமார் ஒரு மாதத்திற்கு மேல் சிகிச்சையில் இருந்தேன். மீனாட்சி மிசன் மருத்துவமனையில் என்னிடம் எந்த தேதியில் வாக்குமூலம் வாங்கினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 2 முதல் 4 எதிரிகள் சதி செய்ததாக கூறிய ரமேஷின் மனைவி பெயர் திலகா. காரைக்குடி மருத்துவமனையில் நான் கூறிய புகார் வாக்குமூலத்தை படித்து காண்பித்தார்கள். மேற்படி திலகா ரமேஷ் சொல்லித்தான் 2 முதல் 4 எதிரிகள் கூட்டுச்சதி செய்தது தெரியவந்தது என்று போலீஸ்சாரிடம் 2 வதாக கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை. மேற்படி 1 முதல் 4 எதிரிகள் சதி திட்டம் 08 தேதி தீட்டினார்கள் அது எனக்கு 9ம் தேதி தெரியவந்தது. இது குறித்து நான் போலீஸ்சாரிடம் புகார் கொடுக்கவில்லை ஏனென்றால் அது குறித்து எனக்கு பயம் ஏற்படவில்லை. 2 முதல் 4 எதிரிகள் வாடகை கொடுக்காவிட்டால் காலி செய்து விட வேண்டும் என்று கூறிவந்தேன். ஏனென்றால் அவர்கள் எனக்கு சரியாக வாடகை தருவதில்லை. ச.பொ.1 அரிவாளை என்னை வெட்ட வந்த போது பார்த்ததுதான். மேற்படி போலீஸ்சார் அரிவாளை அடையாளம் காட்டினார்களா என்று ஞாபகம் இல்லை. 1 முதல் 4 எதிரிகள் என்னை கொலை செய்ய சதி திட்டம் தீட்டுவதாக கூறிய நபர்கள்குறித்து விபரத்தை ராமையா, ரமேஷ் மற்றும் திலகா ஆகியோர் காரைக்குடி டி.டி நகரில் எனது வீட்டில் வந்து சொன்னார்கள். சதி திட்டம் தீட்டியது தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி உரிமையில் வழக்கில் அலமேலுவின் சட்டப்படியான வாரிசாக 1-ம் எதிரி உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1-ம் எதிரி உரிமையியல் வழக்கில் அவரது மாமியாரான நாச்சம்மைக்கு உறுதுணையாக இருந்து வந்ததால் அவரை அச்சுருத்துவதற்க்காக பொய்யான புகாரை கொடுத்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றம், வேறு நபர்கள் செய்த சம்பவத்தை எதிரிகள் செய்ததாக திரித்து பொய்யான புகாரை கொடுத்துள்ளேன்

என்று சொன்னால சரியல்ல. நான் சொன்னது போல ச.பொ.1 அரிவாளை 1-ம் எதிரி பயன்படுத்தவில்லை என்றும் அதை வழக்கிற்காக பின்னிட்டு போலீஸ்சார் தயாரித்து கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | 188/2022 |
| D.E. No. | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | கணேசன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.02.2024

**முதல் விசாரனை:**

நான் காரைக்குடி கீழத்தெருவில் வசித்து வருகிறேன். கடந்த 13.03.2016 ம் தேதியில் சுமார் மதியம் 1 மணிக்கு மேல் இருக்கும். சாட்சி 1ன் இராமநாதன் வீட்டிற்கு அருகாமையில் சிங்கப்பூர் சாப்பிங் நடத்திவருகிறேன். அப்போது பூச்செடிக்கடை நடத்தி வரும் ஆறுமுகம் என்னிடம் வந்து அப்பச்சியை வெட்டிவிட்டார்களாம் என்று என்னிடம் சொன்னார். அப்போது நானும் ஆறுமுகமும் செட்டியார் வீட்டிற்கு சென்று பார்த்த போது இரத்த காயத்தோடு இருந்தார். அப்போது ராம்நாதன் செட்டியாரிடம் கேட்டதற்கு ராஜா என்னை வெட்டி விட்டு சென்றதாக சொன்னார். அதன் பிறகு அவரை ஆட்டோவில் நானும் சாட்சி ஆறுமுகமும் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் அங்கு முதல் உதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள். அதன்பிறகு நாங்கள் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு நானும், ஒரு செட்டியாரும் அழைத்துச்சென்றோம். அதன் பிறகு இராமநாதன் செட்டியார் மனைவிக்கும் அவரது மகனுக்கும் போன் மூலமாக தகவல் தெரிவித்தேன். என்னை வழக்கு சம்பந்தமாக போலீஸ்சார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

**அ**.சா.1. வீட்டிற்கும் எனது கடைக்கும் சுமார் 50மீட்டர் இருக்கும். அவரது வீடு இருக்கும் 100 அடி ரோடு போக்குவரத்து அதிகம் உள்ள பகுதியாகும். அ.சா.1 அடிபட்டு கால்மணிநேரத்தில் நான் அவரது வீட்டிற்கு சென்று விட்டேன். செடிக்கடை ஆறுமுகம் தான் என்னை கூட்டிச்சென்றார். நான் போய் பார்க்கும் போது அவரது வீட்டில் அ.சா1 மட்டும் தான் இருந்தார். நானும் ஆறுமுகமும் ஒரே நேரத்தில் தான் அ.சா.1 வீட்டிற்கு சென்றோம். நாங்கள் சென்ற ஆடோ பதிவு எண் ஓட்டுநர் பெயர் ஆகியவற்றை போலீஸ்சாரிடம் சொல்லவில்லை. அ.சா1 யை காரைக்குடி இரயில்வே ரோட்டில் உள்ள பழைய அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அ.சா.1 ஐ மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு மார்ச் மாதம் 2016ல் ஞாயிற்றுக்கிழமையில் கூட்டிச்சென்றேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
---
IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | 188/2022 |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஆறுமுகம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.02.2024

**முதல் விசாரனை:**

நான் தேவகோட்டை சருகணி ரோட்டில் உள்ள புதுக்குடியிருப்பு என்ற ஊரில் குடியிருந்துவருகிறேன். நான் காரைக்குடி பெரியார் சிலை அருகில் பூச்செடி கடை வைத்துள்ளேன். கடந்த 13.03.2016 தேதியில் நான் பூச்செடி கடையில் நின்று கொண்டிருந்தேன். அப்போது இராமநாதன் அய்யா இரத்தக்கரையுடன் அந்த வீட்டின் கேட்டிற்கு பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். அப்போது நான் பதறிபோய் அருகில் இருந்த ஆட்டோவில் ஏற்றி அருகில் இருந்த சிங்கப்பூர் சாப்பங்கில் இருந்த கணேசன் என்பவரும் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். என்னை வழக்கு சம்பந்தமாக காரைக்குடி வடக்கு போலீஸ்சார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

**அ**.சா.1. வீட்டிற்கும் எனது கடைக்கும் சுமார் 50மீட்டர் இருக்கும். அவரது வீடு இருக்கும் 100 அடி ரோடு போக்குவரத்து அதிகம் உள்ள பகுதியாகும். அ.சா.1 அடிபட்டு கால்மணிநேரத்தில் நான் அவரது வீட்டிற்கு சென்று விட்டேன். அ.சா.2 கணேசனும் நானும் வீட்டுக்குள் சென்றோம். நான் போய் பார்க்கும் போது அவரது வீட்டில் அ.சா1 மட்டும் தான் இருந்தார். நானும் கணேசனும் ஒரே நேரத்தில் தான் அ.சா.1 வீட்டிற்கு சென்றோம். நாங்கள் சென்ற ஆடோ பதிவு எண் ஓட்டுநர் பெயர் ஆகியவற்றை போலீஸ்சாரிடம் சொல்லவில்லை. அ.சா1 யை காரைக்குடி இரயில்வே ரோட்டில் உள்ள பழைய அரசு மருத்துவமனையில் சேர்த்தோம்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
---
IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | |
| S.C. “ | : | 188/2022 |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 4 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | சிதம்பரம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.02.2024.

**முதல் விசாரனை:**

நான் காரைக்குடியில் கண்டனுார் ரோட்டில் வசிக்கிறேன். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். 2016ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் தேதியில் மதியம் 1.30 மணியளில் இராமநாதன் எனக்கு போன் செய்து ராஜா என்ற ராஜசேகர் என்னை வெட்டி விட்டதாகவும் தற்போது காரைக்குடி பழைய அரசு மருத்துவமனையில் இருப்பதாகவும் கூறினார். நான் மருத்துவமனைக்கு சென்று இராமநாதனை பார்த்தேன். அவருக்கு உடம்பு முழுவதும் வெட்டுப்பட்டு இருந்தது. மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லுமாறு கூறினார்கள். நாங்கள் மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு கொண்டு

போய் சேர்த்தோம். அதன் பிறகு மருத்துவமனையில் தொடர்ந்து 15 நாட்களுக்கு குறையாமல் சிகிச்சை பெற்று வந்தார். வழக்கு சம்பந்தமாக போலீஸ்சார் விசாரணை செய்யதார்கள்.

**குறுக்கு விசாரணை:**

அ.சா.1 இராமநாதனும் நானும் உறவினர்கள். அவரது அண்ணன் மருமகன் தான் 1 ம் எதிரி ஆவார். அவர்களுக்கிடைய சொத்து தொடர்பாக உரிமையில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. 13.03.2016 மதியம் 1.30 மணிக்கு காரைக்குடி அரசு மருத்துவமனையில் அ.சா.1 பார்த்தேன். பிறகு 1 மணி நேரத்தில் மதுரைக்கு புறப்பிட்டு விட்டோம். சுமார் 4.30 மணியளில் மீனாட்சி மிசன் மருத்துவமனைக்கு சென்றோம். சம்பவம் தொடர்பாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.